முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி புரட்டாசி மாதம் 14ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 21ம் தேதி வரை**

**செப்டம்பர் 30ம் திகதி முதல் அக்டோபர் 7ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **அமுதமொழி கொண்ட தமிழகமே**
   **ஆளுமை பலம் கொண்ட பரதமே**
   **நேமமுடன் தயவு சிந்தைமிகு**
   **நீதிமான்களை கண்ட தமிழகமே**
2. **தமிழகம் இந்தியா தேசமதில்**
   **தக்க விளம்பி தரிவை திங்கள்**
   **நேமமுடன் முன்னான்கீர் திகதி மேல் மூவேழு திகதிவரை**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிறு முடிய)**
   **நிகழும் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை**
3. **பலனை சுப்பிரமணியர் யானும்**
   **பாடிடுவேன் வார ஆசியாக**
   **சலனமான அரசியல் சூழ்நிலை**
   **சாற்றிடுவேன் மாற்றம் காண்கும்**
4. **காண்கவே அரசியல் தலைவர்கள்**
   **கட்டாயம் தெளிவு காண்பர்**
   **உண்மைபட நலத் திட்டங்களை**
   **ஊழலின்றி நடத்தும் மனபக்குவம்**
5. **பக்குவம்தனை அடைய நேரும்**
   **பணவெறி கொண்ட தலைகள்**
   **சீக்கு வழி விழுந்து சீர்குலைவு**
   **சேவையில் மதிப்பிலா அழிய நேரும்**
6. **நேருமையான இளம் தலைமுறை**
   **நீதி கேட்டு போராடும் காலமும்**
   **வறுமை வென்று வளர்ச்சிக்கான**
   **வழிவகைகளும் உருவாக நேரும்**
7. **நேருமே அதிகார பலங்களை**
   **நெறி மீறா நடத்துகின்ற அரசே**
   **வருமுலகில் தன்னை தன் அரசை**
   **வலுப்பெற காப்பதுடன் இனிதே**
8. **இனிதே தமிழ் மண்ணுக்கும் பாதுகாப்பாகும்**
   **இன்றி எதிர்மறை ஊழல் கூடினால்**
   **இனிமையான தமிழக மண்ணும்**
   **இயற்கையால் அழிவை காணக்கூடும்**

9. கூடுமே பொருளாதாரச் சரிவு
குளறுபடி அல்லல் நாடி இழிவு
இடர்கள் பல கண்டு வீழ நேரும்
இந்திய ஆளுமையும் மாநில உறவில்

10. உறவில் தயவும் இணக்கமும் காண
உயர்வு கண்டு வளர்ச்சிபட
பரதமும் தமிழகமும் சிறக்கும்
பண்பு பக்குவம் ஊட்டி காக்கவே

11. காக்கவே ஆற்றலாக வந்த
கந்தவேலன் என் சக்திமிகு
தேக்கமிலா தருமபலம் கொண்ட
தேசிகனார் துறையூர் எல்லை

12. எல்லை கண்டு மாதருமத்தில்
இணைந்து உதவி பதவியாளர்கள்
வல்லமைபெற அருளாசி பெற
வளமும் மலரும் ஞானபூமியாக

13. ஆகுமே ஞான ஆட்சியுமாக
ஆறுமுகன் என் தயவு பெருகியே
யுகம் வியக்க பரதமும் தமிழகமும்
உண்மைபட உயரும் வளரும் வார ஆசி முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

அமிழ்தினும் இனிமையான அமுதமொழியாம் தமிழை கொண்டிட்ட தமிழகமே ஆளுமை பலம் கொண்ட பாரத தேசமே அன்பும் தயவும்மிக்க நீதிமான்களை தம்முள் கொண்டிட்ட தமிழக தேசமே இவ்வாறிருக்கும் தமிழகத்திலும், பாரததேசமான இந்தியாவிலும் விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ம் நாள் 30.09.2018, ஞாயிறு முதல் புரட்டாசி மாதம் 21ம் நாள் 07.10.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

சலனமாக இருந்திட்ட இந்திய, தமிழக அரசியல் சூழ்நிலைகள் இந்த வாரம் மாற்றங்களை காணும், அரசினை வழிநடத்துகின்ற அரசியல் தலைவர்கள் உறுதியாக தெளிவினை அடைவார்கள். உண்மையுடன் நடந்து நாட்டிற்கு உகந்த நல்ல நலத்திட்டங்களை அறிவிப்பதோடு அத்திட்டங்களை ஊழல்கள் இன்றி நடத்துகின்ற மனப்பக்குவமும் பண்பையும் அடைந்து சிறப்படையும் வாய்ப்பினை பெறுவார்கள்.

பணத்தை அதாவது பொருளாதாரத்தை பெரிதாக எண்ணி பொருளை சேமிக்கும் நோக்கில் பணவெறி கொண்டு தீயவழியில் செல்பவர்கள் எல்லாம் நோய் துன்பத்திற்கு ஆளாகி உடல்நலக் குறைவினால் சீர்குலைவு அடைந்திட நேரும். அவர்களது சேவைகள் எல்லாம் மதிப்பிழந்து அழிந்திட நேரும்.

மூத்த தலைவர்களும், பழம் அரசியல்வாதிகளும் இருந்திட்ட போதும் நேர்மைமிக்க இளம் தலைமுறையினர் நீதி கேட்டு போராடும் காலமும் நாட்டினில் உள்ள வறுமையை வென்று வளர்ச்சிக்கான வழிவகைகளும் இந்த நாட்டினில் உருவாக நேரிடும்.

எந்த அரசு தமது அதிகாரத்தினை தக்க வழியில் பயன்படுத்தி மக்களுக்கு துன்பம் விளைவிக்காமல் அதிகார வரம்பிற்குள் நடந்து, வரம்பு மீறாமல் மக்களை நடத்துகின்றதோ அந்த அரசே வருமுலகில் முருகப்பெருமான் எமது அரசை வழிநடத்தவும், தற்சமயம் வலுப்பெற காப்பதும் நடப்பதோடு தமிழகத்திற்கும் அதுவே பாதுகாப்பான அரசாகவும் ஆகிடும். அப்படியில்லாமல் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் துரோகம் செய்யும்விதமாக எதிர்பதமாக செயல்பட்டு ஊழல்களை மேலும் மேலும் செய்து பாவச்சுமைகளை அதிகப்படுத்தினால் அமைதி பூமியாக விளங்கிய தமிழகம் இயற்கை அன்னையின் கோபத்திற்கு ஆளாகி அழிவுகளை சந்திக்க நேரிடும். நாட்டினில் பொருளாதார சரிவு உண்டாகும். நாட்டினுள் குழப்பமும் குளறுபடிகளும் உண்டாகும். நாட்டிற்கு அவமானம் வந்து சேர்வதோடு பல துன்பங்களையும் நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டி வரும்.

மத்தியில் ஆட்சி செய்வோர் மாநில உறவினில் தயவும் இணக்கமும் காட்டி நடந்திட்டால் பாரத தேசமும் சிறப்படையும், தமிழகமும் உயர்வும் வளர்ச்சியும் அடைந்து சிறப்படையும்.

உலகினைக் காக்கவே முருகப்பெருமான் எமது ஆற்றலாக வந்துதித்திட்ட சக்திமிக்க தர்மபலம் கொண்டிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆறுமுக அரங்கன் உலக நலன் கருதி நடத்துகின்ற பெரும் தருமச் செயல்களில் பதவியாளர்கள் இணைந்து பொருளுதவிகள் செய்து அவரவரும் வல்லமைகளும் ஞானிகளின் அருளாசிகளையும் பெற்று செயல்பட இந்த பூமியே வளரும் மலரும், ஞானபூமியாக இந்த உலகம் ஞானபூமியாக ஆகியே உலகினில் முருகப்பெருமானின் எனது ஞான ஆட்சியாக மலர்ந்து முருகப்பெருமான் எமது தயவு பெருகி யுகம் வியக்க பாரத தேசமும் தமிழகமும் உண்மையான வளர்ச்சியை அடைந்து உயர்வடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–